## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

### அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, டிச.19–

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 19.12.2025 வெள்ளிக்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 67, பாகம்: 142, இடம்: மதுரைசாமி மடம் தெரு, பாயில் கிளப் எதிரில், பெரம்பூர்– சென்னை–11.

மாலை: 5.00 மணி: வட்டம் 67, பாகம்: 143, இடம்: 26, மதுரைசாமி மடம் மெயின் தெரு, பெரம்பூர், சென்னை–11.

மாலை: 5.30 மணி: வட்டம் 67, பாகம்: 144, இடம்: 30/75 கிழக்கு தெரு, மதுரைசாமி மடம், பெரம்பூர், சென்னை–11.

மாலை: 6.00 மணி: வட்டம் 67, பாகம்: 145, இடம்: ஜமாலியா குடிசை மாற்று வாரியம், பெரம்பூர், சென்னை–11.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 64. பாகம்: 5. இடம்: செந்தில்நகர், 1வது குறுக்கு தெரு, கொளத்தூர்–99

மாலை: 5.00 மணி: வட்டம் 65. பாகம்: 44. இடம்: காமராஜர் தெரு, கொளத்தூர்–99

மாலை: 5.30 மணி: வட்டம் 65. பாகம்: 45. இடம்: பகவதி அம்மன் கோயில் தெரு, கொளத்தூர்–99

மாலை: 6.00 மணி: வட்டம் 69(அ) பாகம்: 225. இடம்: மூர்த்தி தெரு, சென்னை–82.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 55ஆ, பாகம்: 62, 63, 64 இடம்: ஆச்சாரப்பன் தெரு, (ஆண்டர்சன் டே மகளிர் பள்ளி அருகில்), சென்னை–1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 54ஆ, பாகம்: 17, 18, 19. இடம்: 435, தங்கசாலை தெரு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 78அ, பாகம்: 69, 70. 71

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 61அ, பாகம்: 157, 160. இடம்: தீயணைப்பு குடியிருப்பு, எக்மோர்.

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 74, பாகம்: 78, இடம்: எண்.135, சந்தியப்பன் மெயின்தெரு, ஓட்டேரி.

மாலை: 4.30 மணி: வட்டம் 74, பாகம்: 79, இடம்: எண்.82, சந்தியப்பன் 2வது தெரு, ஓட்டேரி.

மாலை: 5.00 மணி: வட்டம் 74, பாகம்: 80, இடம்: எண்.105/A, சந்தியப்பன் 3வது தெரு, ஓட்டேரி.

மாலை: 5.30 மணி: வட்டம் 74, பாகம்: 81, இடம்: எண்.48, சந்தியப்பன் 1வது தெரு, ஓட்டேரி.

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 75, பாகம்: 60, 61, 69

மாலை: 4.30 மணி: வட்டம் 75அ, பாகம்: 52, 53, 54

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 97, பாகம்: 144, 148, 162, இடம்: பரசுராம ஈஸ்வரன் கோயில் வடக்கு மாட வீதி, பரசுராம ஈஸ்வரன் கோயில் மெயின் தெரு, பட்டாச்சாரி தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 98ஆ, பாகம்: 193, 194, 195. இடம்: கலைஞர் கருணாநிதி 3, 4, 5, 6, 7, 8, 9வது தெரு, கலைஞர் கருணாநிதி 10, 11வது தெரு, கே.எச்.ரோடு 2வது சந்து

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 104ஆ, பாகம்: 91, 110, 113. இடம்: தென்றல் காலனி 1வது தெரு, ஜெயந்தி பிளாட்ஸ், ஐ.பிளாக், ஐஸ்வர்யா காலனி.

மாலை: 6.00 மணி: வட்டம் 94, பாகம்: 52, 57, 64. இடம்: சிட்கோ நகர், 4வது மெயின்ரோடு, 38வது தெரு, 47வது தெரு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 79அ, பாகம்: 112, இடம்: 03வது மையின்ரோடு லெனின் நகர்

மாலை: 4.30 மணி: வட்டம் 79, பாகம்: 1, இடம்: அண்ணா நெடுஞ்சாலை – ஒரகடம்

மாலை: 5.00 மணி: வட்டம் 80, பாகம்: 95, இடம்: விஜயலட்சுமி புரம்,நெடுஞ்செழியன் தெரு

மாலை: 5.30 மணி: வட்டம் 80, பாகம்: 96, இடம்: விஜயலட்சுமி புரம்,அன்பு நாயகம் தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 81, பாகம்: 136, இடம்: பள்ளி தெரு – வெங்கடாபுரம்

மாலை: 6.30 மணி: வட்டம் 81, பாகம்: 139, இடம்: இந்திரா நகர் – வெங்கடாபுரம்

மாலை: 7.00 மணி: வட்டம் 85, பாகம்: 157, இடம்: கல்யாணபுரம் தெரு

மாலை: 7.30 மணி: வட்டம் 85, பாகம்: 159, இடம்: C.R.M தெரு

மாலை: 8.00 மணி: வட்டம் 86, பாகம்: 228, இடம்: காளிதாசன் தெரு

மாலை: 8.30 மணி: வட்டம் 86, பாகம்: 229, இடம்: Housing Board

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 93, பாகம்: 341, இடம்: 4 வது பிளாக், புழுகேந்தி சாலை

மாலை: 4.00 மணி: வட்டம் 93 , பாகம்: 342 , இடம்: 3 வது பிளாக், புழுகேந்தி சாலை

மாலை: 4.00 மணி: வட்டம் 88 , பாகம்: 277, இடம்: மகாலக்ஷ்மி தெரு கலைவாணர் நகர்

மாலை: 4.00 மணி: வட்டம் 88 , பாகம்: 278, இடம்: AP பிளாக் 9வது தெரு அவ்வை நகர் மேற்கு

மாலை: 4.00 மணி: வட்டம் 89 , பாகம்: 298, இடம்: வட்ட வடிவ நகர்

மாலை: 4.00 மணி: வட்டம் 90 , பாகம்: 307, இடம்: காந்தி நகர், காமராஜர் நகர்

மாலை: 4.00 மணி: வட்டம் 90 , பாகம்: 311, இடம்:காந்தி நகர், காமராஜர் நகர்

மாலை: 4.00 மணி: வட்டம் 89 , பாகம்: 299, இடம்: வட்ட வடிவ நகர்

மாலை: 4.00 மணி: வட்டம் 87 , பாகம்: 202, இடம்: அப்பர் தெரு, பாடி

மாலை: 4.00 மணி: வட்டம் 87 , பாகம்: 205, இடம்: வ. உ. சி தெரு, டி.எம்.பி நகர், பாடி

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.30 மணி: வட்டம் 84A , பாகம்: 195, இடம்: பாரதிநகர், பிராமின் தெரு, கொரட்டூர், சென்னை–80.

மாலை: 6.00 மணி: வட்டம் 84A , பாகம்: 199, இடம்: போத்தியம்மன் கோயில் தெரு, கொரட்டூர், சென்னை–80.

மாலை: 6.30 மணி: வட்டம் 82 , பாகம்: 74, இடம்: ட்டிப்பி காலனி, கருக்கு மெயின்ரோடு, அம்பத்தூர்–53.

மாலை: 7.00 மணி: வட்டம் 82 , பாகம்: 77. இடம்: கருக்கு மேனாம் பேடு, அம்பத்தூர், சென்னை–53.

மாலை: 7.30 மணி: வட்டம் 82A , பாகம்: 27. பாகம்: இடம்: பிள்ளையார் கோவில் தெரு, கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை–53.

மாலை: 8.00 மணி: வட்டம் 82A , பாகம்: 28. பாகம்: இடம்: பிள்ளையார் கோயில் தெரு, கள்ளிகுப்பம், அம்பத்தூர்.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ர.பலராமன்
### டிசம்பர் 19 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

புதுச்சேரி மாநில அவைத்தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில வழக்கறிஞர் அணி அமைப்பாளர், புதுச்சேரி வடக்கு மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

புதுச்சேரி பார் கவுன்சில் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி சி.வீரமணி
### டிசம்பர் 19 (2004)



மாணவப் பருவத்திலிருந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் தேர்வுக்குழு உறுப்பினர், சேலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர், பூமி தான வாரியத்தில் உறுப்பினர், தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.


1968ஆம் ஆண்டு சங்ககிரி இடைத்தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, சிறப்பாக மக்கள் நலப் பணியாற்றி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# திராவிடக் கருத்தியலின் அறிஞர் - பேராசிரியர்!



*திராவிட கருத்தியலின் மேல் முழு நம்பிக்கை கொண்ட இனமானப் பேராசிரியர் அன்பழகன் அவர்களின் 103வது ஆண்டு பிறந்தநாள். வயது மூப்பின் காரணமாக அவர் நம்மை விட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன, அவர் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவரது பேச்சுகளும், செயல்களும், சிந்தனைகளும், எழுத்துகளும் இன்றும் என்றும் கழகத்தவர் மனதில் நிலைத்து நிற்கும்.*

*இனமானப் பேராசிரியர் அவர்கள் தனது இளம் வயதிலேயே தன் தந்தையாரின் வழியொற்றி தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் பிரச்சாரத்தை கேட்ட வளர்ந்தவர்.*

*பிறப்பால், இனத்தால், மொழியால் ஏற்பட்டு விடுகின்ற வாய்ப்புகள் வேறுபட்டதால், தமிழர்கள் திராவிடர்கள் நான்காம் தரச் சாதியாக, தாழ்ந்த இனமாக, இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படும் நிலையை தகர்க்கப் பிறந்ததே திராவிடர் இயக்கம். இவ்வாறான இழிநிலையை அகற்றி தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழரின் பெருமையையும் பண்பாட்டையும், ஆரியத்தின் ஆதிக்கத்திலிருந்து தமிழரை மீட்க் உலகறியச் செய்யும் அரிய பணியினை பொதுமக்களிடமும் இளைஞர்களிடம் பரப்புரை செய்தார்.*

*அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் தொடங்கிய சுயமரியாதை பிரச்சாரமும், திராவிட இயக்க கொள்கை முழக்கமும் தனது தலையாப் பணியாக மேற்கொண்டார். அவர் மறையும் வரையில் தடம் மாறாமல், திராவிட கருத்தியலை முழுவதுமாக உள்வாங்கிக் அதன் வழிநின்று மேடை தோறும் முழங்கியவர். இயக்கத்தின் கேடயமாக விளங்கியவர், காவல் அரணாக திகழ்ந்தவர்.*

*22.07.1978 இனமுரசு ஏ ட்டில் எழுதிய கட்டுரையில் பின் வருமாறு இனமானப் பேராசிரியர் குறிப்பிடுகிறார்;*

*கழகம் ஒரு குடும்பம் ! கண்ணீரும் செந்நீரும் சொரிந்து வளர்த்த பெரிய குடும்பம்! இதனை உருவாக்கத்தான் எத்தனை நாள் இரவு பகலாகச் சிந்தனை அண்ணாவுக்கும் அவர்தம் அருமைத் தோழர்களுக்கும், எத்தனை ஆண்டுகள் இடைவிடா உழைப்பு? எவ்வளவு பாடுபட்டு வளர்க்கப்பட்டது இக்குடும்பம்!*

*கல்லும் முள்ளும் நிரம்பிய பாதையில் கால்கடுக்க நடந்து, காடும் மலையும், கடந்து காட்டாறுகள், பாலை வனங்களை கடந்து, பகைவர் தம் சேனையை புறமுதுகிடச் செய்து, வெற்றி முரசு கொட்டிய பட்டாளத்தைப் போன்று நடைபயின்று, செயல்பட்டு வளர்த்தன்றோ கழகம்!*

*எத்தனையோ இளஞ்சிங்கங்களை, இலட்சிய மறவர்களைப் பலியிட்டன்றோ இந்தப் பயணம் நடைபெற்றது! இந்த தியாக உணர்வும், வல்லமையும் தோழர்கள் பெற்றதற்கான முழுமுதற் காரணம்! நாம் ஒரு குடும்பம் தமிழ் இன உணர்வு பெற்ற குடும்பம் என்பதனால் அன்றோ!*

*இத்தகைய வீரர்களால், அவர்கள் ஏற்ற விழுப்புண்களால் கட்டப்பட்டதன்றோ இந்தக் கழகம் எனும் கோபுரம்.*

*கொள்கை என்ற நீர் பாய்ச்சி, உழைப்பு என்னும் ஏர் ஓட்டி, தியாகம் என்னும் எருவிட்டு, இலட்சியம் என்னும் விதை இட்டு வளர்ந்தது அன்றோ கழகம் என்னும் பயிர்! என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள்.*

*பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பிறகு கழகத் தேரை நிலைநிறுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கண்ணின் இமைபோல் சுமார் ஐம்பது ஆண்டுகள் கழகத்தை காத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவருக்கு துணையாக தோழமை உணர்வுடன் கழகத்தை கட்டி காத்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். கலைஞர் இந்த இயக்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல் ஏற்பட்ட சோதனைகளும், பிளவுகளும், ஏராளம், ஆனால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களும் இணைந்து கழகத்தை காத்தது பற்றி கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை*

**“ஒரு புயற்பொழுதில்**
**கலைஞரும், நீயும் (பேராசிரியர்)**
**இரு கரங்களாகக்**
**காத்திராவிட்டால்**
**திராவிடத் தீபம்**
**அணைந்து போயிருக்கும்”**

*இக்கவிதையே இவ் இரு தலைவர்களுக்கு இடையே இருந்த உறவையும் கொள்கைப் பிணைப்பையும் அறிந்து கொள்ளலாம்.*

*1949ல் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பொழுது, கலைஞர், பேராசிரியர் அன்பழகன், நாவலர், மதியழகன் போன்றவர்கள் இளவயதினர். அன்றைய இளையோர், மூத்தோராக ஆகிய காலத்தில் தமக்கு பின்னரும் கழகத்தின் பணியை தொய்வின்றி தொடர 1980 ஆம் ஆண்டில் மதுரை ஜான்சி ராணி பூங்காவில் இளைஞர் அணியை தோற்றுவித்தனர். அவ் அணி திறம்பட செயல்பட, இனமானப் பேராசிரியரால் அடையாளப் படுத்தப்பட்டவர் தான் கழகத்தின் இன்றைய தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர், முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். கலைஞர் அவர்கள் உடல்நலம் குன்றியிருந்த காலத்தில் 2017 ஆம் ஆண்டு சனவரி 4 ஆம் நாள் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் கழக ஆக்கப் பணிகள் நடைபெற தளபதியாரை செயல் தலைவராக அறிவித்தார், தளபதி ஒருவரால் தான் கழகத்தை வழி நடத்த இயலும் என்பதில் உறுதியாக இருந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். 28 ஆம் தேதி ஆகஸ்டு, 2018 முதல் செயல் தலைவராக இருந்தவரை தலைவராக முன்மொழிந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். தலைவர் தளபதிஅவர்கள் தனது உழைப்பால் தொடர் வெற்றிகளை குவித்து, 2021 ஆம் ஆண்டு கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி சிறப்பானதொரு திராவிட மாடல் ஆட்சியை நாடே வியக்கும் வன்னம் சிறப்பாக நடத்தி வருகிறார். முதல்வர்களுள் முதல்வராகவும், தமிழ்நாட்டை நம்பர் ஒன் மாநிலமாகவும் ஆக்குவேன் என்று உறுதி பூண்டுள்ளார். இது மட்டுமல்லாமல் கழகத்தின் சித்தாந்த எதிரியான சனாதன சக்திகளின் ஆட்சி ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ளது, அவர்களோடு கொள்கை மாறுபட்டு சிறிதும் சமரசம் செய்து கொள்ளாமல் சிறப்பானதொரு ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறார். ஒரு பக்கம் ஒன்றிய அரசு, மறுபுறம் ஆளுநர், நிதிப்பகிர்வில் ஓரவஞ்சனை என்று எல்லா தடைகளையும் தாண்டி சாதனை படைத்து வருகிறோம் என்று சட்டமன்றத்தில் உரைத்தார் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். ஒரு புறம் ஆட்சியில் இருந்தாலும் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார், அதன் ஒரு கட்டமாக தனக்கு துணை புரிவதற்காக அரசில் கழகத்தின் இளைஞரணியின் ஆற்றல் மிகு செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக நியமனம் செய்து உள்ளார். அவரும் தனக்களிக்கப்பட்ட கட்சி மற்றும் ஆட்சி பொறுப்புகளை திறம்பட செய்து வருகிறார். அவரது கொள்கை பாய்ச்சலைக் கண்ட கழகத்தின் சித்தாந்த எதிரிகள் நடுநடங்கி உள்ளனர். அவரது செயற்பாடுகள் கழகத்தின் எதிர்கால நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பது உறுதி.*



**சி. சேரன்,**

தலைமை செயற்குழு உறுப்பினர்
மற்றும் செயலர் – பேராசிரியர் நினைவு
நற்றமிழ் தொண்டகம்.

*இளைஞர்களின் மீது மிகுந்த எதிர்பார்ப்பை வைத்திருந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். இளைஞரணி தோழர்கள் சமுதாயத்திற்காக வாழ வேண்டும், இந்த எண்ணம் இளைஞரணி தம்பிமார்களின் உள்ளத்தில் ஆழமாக இடம்பெற வேண்டும்.*

*திராவிட இயக்கம் இன்னும் வலிவுடையதாக, இன்னும் பொலிவுடையதாக, இன்னும் ஆற்றல் உடையதாக, இன்னும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கு வழிக் காட்டக் கூடியதாக வளர்ந்தாக வேண்டும்.*

*இளைஞரணி தோழர்களின் அரியப் பணி காரணமாகத்தான் வருங்காலத் தமிழகம் ஒளிபெற்றாக வேண்டும். வருங்காலத் தமிழகத்தை சிறப்பாக வாழ வைப்பதற்கு இளைஞர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இனமானப் பேராசிரியர் அவர்கள் ஏற்றுக்கொண்ட எளிமையான பொதுவாழ்வு எல்லோரும் வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ள வேண்டியது, குறிப்பாக இளவயது தம்பிமார்கள் தங்கள் வாழ்க்கை நெறியாக கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம். இனமானப் பேராசிரியர் இன்றிருந்தால் பின்வரும் கவிதையை மிகவும் பாராட்டியிருப்பார்*

*“இன்று இளைஞர் அணியின் நிர்வாகிகள் நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நாயகராம் சின்னவர் உதயநிதியுடன் பணியாற்றும் நற்றுணையாவர்! இன்றைய இளைஞர்கள் நாற்றுகளாம்; நாளை மக்களுக்கு பயன் தரும் நற்பயிர்களாகும்! நமது இளைஞர் அணியினர் திமுகவின் விழுதுகளாகி, வேர்விட்டு பரந்து நிழல் தந்து நிலையாய் நிற்கட்டும்!”*

*அவரது நினைவுநாளில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி வாகை சூடி திராவிட மாடல் 2.0 ஆட்சியை நம் அருமை தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் அமைக்க உறுதியேற்போம்.*

**வாழ்க!! இனமானப் பேராசிரியர் தொண்டுள்ளம்!!**
**வளர்க வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்.**

---

## நே.சிற்றரசு தலைமை! அன்பகம் கலை – தயாநிதிமாறன் எம்.பி. –
## நா.எழிலன் எம்.எல்.ஏ. – வினோத் வேலாயுதம் – சைதை சாதிக் பங்கேற்பு!

# 110 (அ) வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை!

*சென்னை, டிச.19-*

*110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-*

*தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி, துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைப் படி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் 110 (அ) வட்டத்தில் நாளை (20.12.2025 - சனிக்கிழமை) மாலை 7.00 மணி அளவில் பாகம் - 127, 128, 129, 130, 131 ஆகிய பாகங்களில் தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்வாடி என்ற பரப்புரை புஷ்பாநகர் இராமலிங்க சுவாமி கோயில் அருகில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.*

*இப்பரப்புரைக் கூட்டத்திற்கு பாகம் 127, 128, 129, 130, 131 பாகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, BYA மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு 110 (அ) வட்டச் செயலாளர் த.குணசேகர் அறிக்கை விடுத்துள்ளார்.*



சென்னையில், நேற்று (18.12.2025) அமைச்சர்கள் திருமதி பி. கீதா ஜீவன், முனைவர் கோவி. செழியன் ஆகியோர், சமூக சீர்திருத்தத் துறையின் கீழ் இயங்கி வரும் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு நடத்திய சமூக நீதி நாள் 2025 விழாவில், மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் முனைவர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் மனுஷ்ய புத்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.